கலைஞரின் பேனா!

முக்குலத்தோர் சமூகத்தை குற்றப் பரம்பரையினர் என அரசு ஆவணங்களில்குறிப்பிடப் பட்டதை மிக அழகாக நாகரிகமாக சீர் மரபினர் என அழகு தமிழில் அரசு ஆவணங்களில் எழுத ஆணையிட்டார். அது போல "நொண்டி, ஊமை, குருடன்" என நாகரிகமில்லாமல் அழைத்ததை மாற்றி "மாற்றுத் திறனாளி" என மனிதாபிமானம் பொங்கும் சொற்களில் எழுதி மாற்றியது தான் கலைஞரின் பேனா . மூன்றாம் பாலினத்தவரை "அலி" என்றும் "ஒன்பது" என்றும் இந்த பாழாய்ப்போன சமூகம் அழைத்துக்கொண்டிருந்தது. அவர்களை திருநங்கைகள், திருநம்பி என்றும் எழுதி அவர்களின் மனம் குளிர்வித்தது தான் கலைஞரின் பேனா.

இம்ரான் கானுக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை: வீடு புகுந்து கைது!

இஸ்லாமாபாத், ஆக.6

தோஷகானா வழக்கில் முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்ததை தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார். தோஷகானா எனப்படும் ஊழல் குற்றச்சாட்டு வழக்கில் இஸ்லாமாபாத் மாவட்ட மற்றும் செசன்ஸ் நீதிமன்றம் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை குற்றவாளி என்று அறிவித்து அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

மேலும் இந்த வழக்கில் அவருக்கு பாகிஸ்தான் பணம் ஒரு லட்சம் அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. இம்ரான் கான் பாகிஸ்தான் தேர்தல் ஆணையத்திடம் வேண்டுமென்றே போலியான விவரங்களைச் சமர்ப்பித்துள்ளார், மேலும் அவர் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்டு உள்ளது என நீதிமன்றம் கூறி உள்ளது.

3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டதால் இம்ரான்கான் எம்.பி. பதவியை இழக்கிறார். இஸ்லாமாபாத் விசாரணை நீதிமன்றம் அவரை குற்றவாளி என்று அறிவித்த சிறிது நேரத்திலேயே, லாகூரில் உள்ள அவரது ஜமான் பார்க் இல்லத்திற்குள் புகுந்து பஞ்சாப் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில்

காஞ்சி மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாள் அமைதிப் பேரணி!

கழகத்தினர் அனைவரும் பங்கேற்றிட மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஆக.6-

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் காஞ்சி மாநகரில் மாபெரும் அமைதி பேரணி நாளை (7.8.2023) காலை நடைபெறுகின்றது. இந்த அமைதிப்பேரணியில் மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முழுமையான பங்களிப்பை அளித்தவர் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான், அவரது ஆட்சி ஏழை எளிய மக்களுக்கு பொற்கால ஆட்சியாகத் திகழ்ந்தது, சிறுபான்மை மக்களுக்கு மேன்மை தங்கிய ஆட்சியாகத் திகழ்ந்தது. நடுத்தர மக்களுக்கு நலம் பயக்கும் ஆட்சியாக விளங்கியது.

விவசாயிகளுக்கு நன்மை தரும் ஆட்சியாக, மாணவர்களுக்கு கல்வித் தரும் ஆட்சியாக, பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களை கை தூக்கி விடும் ஆட்சியாக விளங்கியது. குறிப்பாக இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு

இலவச மின்சாரம் வழங்கியது, விவசாயிகளின் கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு இலவச நிலம், கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு திட்டம், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் சட்டம், தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம், ரேஷன் கடைகளில் குறைந்த விலையில் மளிகை பொருட்கள் விற்பனை, ரேஷன் கடைகளில் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் வழங்கி, இன்றைக்கு இலவச அரிசி வழங்கப்படுகிறது என்றால் அதற்கு கலைஞர் அவர்களின் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கி வித்திட்டதே காரணம்.

மகளிர் மகப்பேறு நிதி உதவித் திட்டம், கலைஞர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மாணவ, மாணவியர்களுக்கு இலவச கல்வித் திட்டம், மருத்துவ இன்ஜினியரிங் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு ரத்து என்று அப்பப்பா எத்தனை எத்தனை திட்டங்கள். அவரது அடி யொற்றி கழகத் தலைவர் நமது முதல்வர் மு.க.ஸ்டலின் அவர்கள் தற்போது மகளிர்க்கு இலவச பேருந்து திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் என்று மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் திட்டம், கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம் என்ற பெயரில் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் திட்டம் என்று கலைஞர் வழியில் தமிழ்நாட்டின் நலனுக்கு, தமிழ் மக்களின் நலனுக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்.

தமிழ் நாட்டு முன்னேற்றத்திற்காக கண்துஞ்சாமல் உழைத்துக் கொண்டிருக்கும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, தமிழினத் தலைவர்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை (7.8.2023) காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்ட, ஊராட்சி கிளைக் கழக அலுவலகங்களில் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி கலைஞர் அவர்களின் புகழ் ஓங்கச் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் காஞ்சிபுரம் மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாளை (7.8.2023-திங்கள்கிழமை) காலை 7 மணிக்கு, காஞ்சிபுரம் தந்தை பெரியார் தூண் (காந்தி ரோட்டில்) அருகில் இருந்து என் (மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.) தலைமையில் மாபெரும் அமைதிப் பேரணி துவங்கி டி.கே. நம்பி தெருவில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகம் பவள விழா மாளிகையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

எனவே இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக, ஊராட்சிக் கிளைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக முன்னணியினர், தோழர்கள், பொது மக்கள் என்று அனைத்துத் தரப்பினரும் இந்த அமைதிப் பேரணியில் தவறாமல் கலந்துகொண்டு கலைஞர் அவர்களின் புகழை ஓங்கச் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 5-ஆம் ஆண்டு நினைவு அமைதிப்பேரணி!

தியாகராயர் நகர் பகுதிக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி - கே.ஏழுமலை அறிக்கை!

சென்னை, ஆக.6-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை (7-ஆம் தேதி) நடைபெறும் மாபெரும் அமைதிப் பேரணியில் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொள்வீர் என தியாகராயர் நகர் கிழக்கு-மேற்குப் பகுதிச் செயலாளர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வருகின்ற 7082023 (திங்கட்கிழமை) அன்று காலை 8 மணி அளவில் ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள அவரது திருவுருவ சிலை அருகில் இருந்து நமது கழக தலைவர் முதல்வர் அவர்களின் தலைமையில் அமைதி பேரணி தொடங்கி மெரினாவில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செய்ய உள்ளார்.

எனவே தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வர்த்தகர் அணி, வழக்கறிஞர் அணி, சுற்றுசூழல் அணி, தொண்டர் அணி, இலக்கிய அணி, கலை, I இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, பொறியாளர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு, சிறு பான்மை நலஉரிமைப் பிரிவு, மருத்துவ அணி, தொழிலாளர் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, அயலக அணி ஆகிய அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு கிழக்குப் பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் அமைதிப்பேரணி !

ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதிக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் வேண்டுகோள்!

சென்னை, ஆக.6-

ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் திருவுருவ சிலை அருகில் இருந்து கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் (07.08.2023 திங்கட் கிழமை) காலை 8.00 மணியளவில் நினைவு அமைதி பேரணி நடைபெறுகிறது.

மற்றும் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பாக காலை 09.30 மணியளவில் அப்போலோ மருத்துவமனை அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து நினைவு அஞ்சலி செலுத்தபடுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளர் தா.இளையஅருணா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபிநேசர் எம்.எல்.ஏ, மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினம்!

மாவட்டச் செயலாளர் – பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பாக 07/08/2023 அன்று திங்கள் கிழமை முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, நமது திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஏழை எளியோருக்கும், ஆதரவற்றோர் இல்லங்களுக்கும் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நமது திருச்சி தெற்கு மாவட்டத்தின் சார்பில் மாநில, மாவட்ட, மாநகர, நிர்வாகிகள், மற்றும் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, அணி அமைப்பாளர்கள் கீழ்க்காணும் பகுதிகளுக்கு வருகை தந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்த உள்ளார்கள். அவர்களை அந்தந்த பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட கழகத்தால் அனுப்பப்பட்ட நிர்வாகிகளை ஒருங்கிணைத்து நினைவஞ்சலியை நடத்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வ.எண்	தலைமை பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள்	நிகழ்வில் கலந்து கொள்ளும் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள்	பதவி	தலைவர் கலைஞரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவிக்கும் இடங்களின் எண்ணிக்கை	அன்னதானம் வழங்கம் இடங்களின் எண்ணிக்கை
1.	KSM.கருணாநிதி செயலாளர் திருவெறும்பூர் வடக்கு	கே.என்.சேகரன் பி.கிருஷ்ணகோபால் N.சுரேஷ்பாபு	தலைமை செயற்குழு உறுப்பினர் மாவட்ட அமைப்பாளர் மாவட்ட அமைப்பாளர்	ஊராட்சி 11	ஒன்றியம் 1
2.	C.செல்வராஜ் செயலாளர் மருங்காபுரி வடக்கு	பி.எம்.சபியுல்லா M.முகமது இலியாஸ் S.சரவணன்	தலைமை செயற்குழு உறுப்பினர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	ஊராட்சி 17	ஒன்றியம் 1
3.	C.கங்காதரன் செயலாளர் திருவெறும்பூர் தெற்கு	என்.கோவிந்தராஜ் S.V.ராஜ்குமார் D.செந்தில்	மாவட்ட அவைத்தலைவர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	வட்டங்கள் 9	ஒன்றியம் 1
4.	C.ராமசாமி செயலாளர் மணப்பாறை ஒன்றியம்	அ.த.த.செங்குட்டுவன் MC.சிவக்குமார் J.அன்பழகன்	மாவட்ட துணை செயலாளர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	ஊராட்சி 14	ஒன்றியம் 1
5.	M.பழனியாண்டி செயலாளர் மருங்காபுரி மத்தியம்	லீலா வேலு N.A.உதயகுமார் A.தினகரன்	மாவட்ட துணை செயலாளர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	ஊராட்சி 17	ஒன்றியம் 1
6.	R.ஸ்ரீரங்கன் செயலாளர் வையம்பட்டி வடக்கு	இரா.குணசேகரன் A.ஜான் சாலமன் இரா.முத்துதீபக்	மாவட்ட பொருளாளர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	ஊராட்சி 9	ஒன்றியம் 1
7.	V.A.ராஜேந்திரன் செயலாளர் வையம்பட்டி தெற்கு	செ.பன்னீர்செல்வம் P.அருள் சுந்தர்ராஜன் S.இப்ராஹிம்	பொதுக்குழு உறுப்பினர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	ஊராட்சி 9	ஒன்றியம் 1
8.	C.சின்னஅடைக்கண் செயலாளர் மருங்காபுரி தெற்கு	உ.ராஜேஸ்வரன் JJ.மகேஷ் A.P.ரகுநாதன்	பொதுக்குழு உறுப்பினர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	ஊராட்சி 15	ஒன்றியம் 1
9.	AMG.விஜயகுமார் செயலாளர் அரியமங்கலம் பகுதி	வண்ணை அரங்கநாதன் சாந்தகுமாரி சையது பாவா பக்ருதீன்	தலைமை செயற்குழு உறுப்பினர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	வட்டங்கள் 8	பகுதி 1
10.	R.மோகன் செயலாளர் மலைக்கோட்டை பகுதி	என்.தமிழ்செல்வன் ஆ.ஜெகதீசன் கோ.வி.நாகராஜ்	மாநகர பொருளாளர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	வட்டங்கள் 10	பகுதி 1
11.	S.சிவக்குமார் செயலாளர் திருவெறும்பூர் பகுதி	ஆறு.சந்திரமோகன் கே.கயல்விழி S.ரம்யா பேகம்	மாநகர துணை செயலாளர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	வட்டங்கள் 8	பகுதி 1
12.	R.G.பாபு செயலாளர் மார்க்கெட் பகுதி	கே.கே.கே.கார்த்தி கா.முத்துவெங்கடேஷ் A.முகமது அசாருதீன்	பொதுக்குழு உறுப்பினர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	வட்டங்கள் 8	பகுதி 1
13.	O.நீலமேகம் செயலாளர் காட்டூர் பகுதி	வி.சரோஜினி வி.பொற்கொடி பா.சிந்துஜா	மாநகர துணை செயலாளர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	வட்டங்கள் 8	பகுதி 1
14.	T.P.S.S.ராஜ்முகமது செயலாளர் பாலக்கரை பகுதி	பொன்.செல்லையா ந.ப.ம.மனோகரன் ஜே.சரவணன்	மாநகர துணை செயலாளர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	வட்டங்கள் 10	பகுதி 1
15.	E.M.தர்மராஜ் செயலாளர் பொன்மலை பகுதி	BA.நூர்கான் N.செந்தமிழ் செல்வன் பா.சரவணன்	மாநகரஅவைத்தலைவர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	வட்டங்கள் 10	பகுதி 1
16.	G.மணிவேல் செயலாளர் கலைஞர் நகர் பகுதி	ஆர்.மணிமேகலை KAV.தினகரன் M.பன்னீர்செல்வன்	பொதுக்குழு உறுப்பினர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	வட்டங்கள் 10	பகுதி 1
17.	இ.காயாம்பு செயலாளர் துவாக்குடி நகரம்	என்.செந்தில் R.P.சுந்தர்ராஜன் A.பெஞ்சமின்	மாநில நிர்வாகி மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	வட்டங்கள் 17	நகரம் 1
18.	மு.ம.செல்வம் செயலாளர் மணப்பாறை நகரம்	வி.தனசேகர் G.ரமேஷ் M.குறிஞ்சி மன்னன்	பொதுக்குழு உறுப்பினர் மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	வட்டங்கள் 27	நகரம் 1
19.	MRTPKதங்கவேல் செயலாளர் கூத்தைப்பார் பேரூர்	கவிஞர் சல்மா M.ஜியாவுதீன் C.M.மெய்யப்பன்	மாநில நிர்வாகி மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர்	வார்டுகள் 10	பேரூர் 1
20.	KA.நாகராஜ் செயலாளர் பொன்னம்பட்டி பேரூர்	இரா.மூக்கன் முத்தமிழ் கருணாநிதி சு.அடைக்கால ராஜா	மாவட்ட துணைசெயலாளர் மாவட்ட அமைப்பாளர் மாவட்ட அமைப்பாளர்	வார்டுகள் 15	பேரூர் 1

அமைச்சர் **அன்பில் மகேஷ் பொய்யாமொழி**
செயலாளர் –திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.